**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கும்மிடிபூண்டி**

**முன்னிலை – திரு. R.செந்தில் குமார், M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர், கும்மிடிபூண்டி

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி திங்கள் 27 –ம் நாள்

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் நாள் புதன்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண் 315/2025**

**CNR.NO. TNTR – 3600 – 2670 – 2025**

தமிழ்நாடு அரசு சார்பாக

காவல் ஆய்வாளர்,

கவரைப்பேட்டை காவல் நிலையம்,

குற்றஎண். 102/2025

U/s. 296(b), 118(1), 351(3) of BNS, r/w 4 of TNPHW Act.

……………..குற்றமுறையீட்டாளர்

**// எதிர்//**

1. அலெக்ஸ், த/பெ.அசோகன், ஆ/21,

எண்.57, பெருமாள் கோவில் 2வது தெரு,
A.N.குப்பம் கிராமம், கும்மிடிபூண்டி வட்டம்,

2. சாரதி (எ) அப்பு, த/பெ.அருள், ஆ/20,

எண்.225, பெருமாள் கோவில் 1வது தெரு,

A.N.குப்பம் கிராமம், கும்மிடிபூண்டி வட்டம்,

3. பிரியன் (எ) ஜெபா, த/பெ.முரளி, ஆ/21,

பெருமாள் கோவில் 2வது தெரு,
A.N.குப்பம் கிராமம், கும்மிடிபூண்டி வட்டம்,

………………..எதிரிகள்

| | | |
|---|---|---|
| **குற்றம்** | : | எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS, r/w 4 of TNPHW Act. |

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2026.03.11 19:06:17 +0530

| | | |
|---|---|---|
| **குற்றம் வனையப்பட்டது** | : | எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS, r/w 4 of TNPHW Act. |
| **தீர்ப்பு** | : | முடிவாக, எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS, r/w 4 of TNPHW Act–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, பாரதிய நியாயக் சுரக்க்ஷா சன்ஹிதா 271(1)of BNSS-ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகள் எழுதி கொடுத்த பிணை முறி ஆவணம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக வேண்டியுள்ளது. |

| வ. எண் | குற்றம்சாட்டப்பட்டவர் பற்றிய விளக்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | காவல் நிலையத்தின் பெயர்/குற்ற எண் | பெயர் | தந்தை/ கணவரின் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | கவரைப்பேட்டை காவல் நிலையம், குற்றஎண். 102/2025 | அலெக்ஸ் | அசோகன் | -- | எண்.57, பெருமாள் கோவில் 2வது தெரு, A.N.குப்பம் கிராமம், | 21 |
| 2 | | சாரதி (எ) அப்பு | அருள் | -- | எண்.225, பெருமாள் கோவில் 1வது தெரு, A.N.குப்பம் கிராமம், | 20 |
| 3 | | பிரியன் (எ) ஜெபா, | முரளி | -- | பெருமாள் கோவில் 2வது தெரு, A.N.குப்பம் கிராமம், | 21 |

| தேதி | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| நிகழ்வு | புகார் | கைது (அ) சரணடை -ந்தது | ஜாமீன் விடுப்பு | ஒப்படைத்தல் / அனுப்பி வைத்தல் | சாட்சிகளின் விசாரணை செய்ய ஆரம்பித்த தேதி | சாட்சிகளின் விசாரணை செய்ய முடித்த தேதி | தண்ணை (அ) ஆணை (அ) விடுதலை | குற்றம் சாட்டப்பட்டவர் காண் முடிவு/ முடிவு தேதி | தமாதத்திற்கு விளக்கம் |

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.03.11 19:06:25 +0530

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15.05.25 | 16.05.25 | 25.05.25 | A1 – A3<br>29.05.25 | - | 02.02.26 | 04.03.26 | விடுதலை | 11.03.26 | - |

| வரிசை எண். | விளக்கம் | விவரம் | |
|---|---|---|---|
| 1. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் காவலில் வைக்கப்பட்ட காலம் | குற்றவாளி காவலில் வைக்கப்பட்ட/ சரணடைந்த தேதி | விடுவிக்கப்பட்ட விவரம் |
| | | 25.05.2025 | 1ம் எதிரி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற CMP.No. 34/2025, dated; 29.05.2025 தேதி பிணையில் சென்றுள்ளார்.<br><br>2 மற்றும் 3ம் எதிரிகள் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற CMP.No.339/2025, dated; 29.05.2025 தேதி பிணையில் சென்றுள்ளனர். |
| 2. | நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்த தேதி. | 29.08.2025 | |
| 3. | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கின் சமர்ப்பிக்கும் தேதி | இல்லை | |
| 4. | பாரதிய நியாயக் சுரக்க்ஷா சன்ஹிதா 263ன் இன் கீழ் குற்றம் சாட்டப் பட்டவரை விசாரிக்கும் தேதி | 263 of BNSS on 24.12.2025 | |
| 5. | அனைத்து இதர மனுக்களையும் தாக்கல் செய்தல். Cr.P.C இன் 317/355 BNSS போன்ற வழக்கமான மனுக்கள் தவிர, மேல் நீதிமன்றங்களில் உள்ள சவாலின் முடிவுகள் உட்பட அவற்றின் முடிவுகள் | இவ்வழக்கில் புகார்தாரரும் எதிரியும் சமாதானமாகி– விட்டதால் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 320(2) / 359(2) BNSSன் கீழ் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு அந்தமனுவானது C.M.P.No.03/2026 என ஆக எண்ணிடப்பட்டு அதில் பிரிவு 296(b)–ன் கீழான குற்றம் இருதரப்பினரிடையே சமரசம் செய்ய முடியாது என்பதால் அம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது. | |

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.03.11 19:06:31 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | முதல் விசாரணை மற்றும் சாட்சிகளின் குறுக்கு விசாரணை தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 02.02.2026 | 02.02.2026 பிறழ்சாட்சி |
| | | அ.சா.2 | 02.02.2026 | 02.02.2026 பிறழ்சாட்சி |
| | | அ.சா.3 | 04.03.2026 | 04.03.2026 |
| 7. | குற்றம் சாட்டப்பட்ட U/s 351(1)(b) BNSS– இன் படி விசாரணை செய்த தேதி. | 06.03.2026 | | |
| 8. | இந்த தோற்றம் / தயாரிப்பில் தலைமறைவு விவரங்கள், சந்தர்ப்பம் இருக்கலாம். | ஜாமீனில் வெளிவர முடியாத வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது | | ரத்து செய்யப்பட்ட தேதி |
| | | -- | | -- |
| 9. | அவர்களின் முடிவுகளுக்கு மேல் நீதிமன்றங்களால் பெரும் தடை | இல்லை | | |

இவ்வழக்கானது 29-08-2025-ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.315/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் திரு.வீரமணி அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.அரவிந்த், திரு.தினேஷ்குமார், திரு.கார்த்திக், திரு.அரவிந்தன் என்பவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

கடந்த 15.05.2025ம் தேதி மாலை 19.00 மணியளவில் சாட்சி2 நந்தினி என்பவரின் குழந்தைகள் புகார்தாரரின் வீட்டின் முன்பு விளையாடிக் கொண்டிருந்த

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.03.11 19:06:39 +0530

போது அந்த தெருவில் இருசக்கர வாகனத்தில் எதிரிகள் வேகமாக வந்ததால், சாட்சி2 ஏன் இப்படி வேகமாக வண்டியை ஓட்டுகிறீர்கள் குழந்தைகள் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் மீது மோதினால் என்னவாகும் என கேட்டபோது புகார்தாரர் மற்றும் சாட்சி2ஐ பார்த்து ஓத்தா நாரக்கூதி தேவிடியாளுங்களா ஊரை விட்டு ஊர் வந்து எங்களை கேட்பீங்களா என அசிங்கமாக பேசியும் உருட்டு கட்டையை எடுத்து சாட்சி2ன் முகத்திலும், இடுப்பிலும் ஓங்கி அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தியும் சாட்சி2ஐ ஒரு பெண் என்றும் பாராமல் அவரை துன்புறுத்தி அடித்து, புகார்தாரர் மற்றும் சாட்சி2ஐ பார்த்து ஓத்தா தேவிடியா முண்டைகளா இனிமேல் எங்களை கேட்டால் உங்களை வீட்டோடு கொளுத்தி சாகடித்து விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்துள்ள செயல் சட்டபிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS, r/w 4 of TNPHW Act–ன் கீழ் குற்றம் என்று எதிரிகள் மீது கவரைப்பேட்டை காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணநகல்கள் அனைத்தும் பாரதிய நியாயக் சுரக்ஷா சன்ஹிதா 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு அவைகளை பரிசீலனை செய்து பார்க்க தகுந்த சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

3. பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலணை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்கிற்கான முகாந்திரம் உள்ளதால் எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS, r/w 4 of TNPHW Act–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றம் பற்றி வினவ தாங்கள் குற்றவாளிகள் இல்லை என எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தும், வழக்கு விசாரணை செய்யப்படவேண்டும் என்றும் கோரினர்.

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.03.11 19:06:46 +0530

4. எனவே எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6**. அரசு தரப்பின் வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 16.05.2025ம் தேதி அன்று இராணி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் கவரைப்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.102/2025 சட்ட பிரிவு 296(b), 118(1), 351(3) of BNS, r/w 4 of TNPHW Act–ன் கீழ் வழக்கு பதிவு செய்து அன்றையதினமே சாட்சிகளின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 25.05.2025 அன்று 11.45 மணிக்கு இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை கைது செய்து சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு 1ம் எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் 1ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த இரண்டு அடி நீளம் உள்ள சவுக்கு உருட்டுகட்டை ஒன்று, பெரிய செங்கல் ஒன்று மகசரில் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பியதாகவும் எதிரியை நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். பின்னர் இவ்வழக்கின் புலனாய்வு முடித்து 06.10.2025ம் தேதி அன்று சட்ட பிரிவு 296(b), 118(1), 351(3) of BNS, r/w 4 of TNPHW Act–ன் கீழ் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.03.11 19:06:53 +0530

7. அரசு தரப்பில் சாட்சிகள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையானோரில் பட்டியல் சாட்சி–1 மற்றும் 2 அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகவும், பட்டியல் சாட்சி 9 அ.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அ.சா.1 மற்றும் அ.சா.2 பிறழ் சாட்சிகளாகியுள்ளனர். பிறபட்டியல் சாட்சிகள் விசாரிக்கப்படாமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளனர்.

8. அவ்வாறு செய்யப்பட்ட விசாரணையில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியங்கள் குறித்து எதிரிகளிடம் 351(1)(b) of BNSS–படி வினவியபோது, சாட்சிகள் கூறுவது பொய் என்றும், தங்களது தரப்பில் சாட்சிகள் எதுவுமில்லை எனவும் தங்கள் தரப்பை முடித்துக்கொண்டுள்ளனர்.

<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய தீர்வு யாதெனில்:–</u>

9. எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளனவா என்பதே இவ்வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

10. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன் வாதுரையில், எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் மூலம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமெனவும் எடுத்துரைத்தார்.

11. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்றும்,

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.03.11 19:07:00 +0530

ஆகையால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யவேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

12. இருதரப்பும் கேட்கப்பட்டது, சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலிக்கையில், அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 மற்றும் அ.ச.பொ.2 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 ராணி அவரது முதல் விசாரணையில், **"நான் A.N.குப்பத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி2 நந்தினி என்னுடைய மகள் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையது அல்ல**" என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையின்போது **"ஆஜர் எதிரிகளும் நானும் ஒரே ஊர்க்காரர் மற்றும் உறவினர் என்றால் சரிதான். அதன் காரணமாக நான் எதிரிகளுடன் சமாதானமாக செல்கிறேன் என்றால் சரிதான். "** என தெரிவித்துள்ளார்.

14. அ.சா.2 நந்தினி என்பவர் அவரது முதல் விசாரணையில் **" நான் A.N. குப்பத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 ராணி என்னுடைய அம்மா ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது."** என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும்

அவரது குறுக்கு விசாரணையின்போது **"ஆஜர் எதிரிகளும் நானும் ஒரேஊர்க்காரர் மற்றும் உறவினர் என்றால் சரிதான். அதன்காரணமாக நான் எதிரிகளுடன் சமாதானமாக செல்கிறேன் என்றால் சரிதான். நான் தடுமாறி கீழே விழுந்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான்."** என தெரிவித்துள்ளார்.

15. இவ்வழக்கின் புலன் விசாரணை சாட்சியான சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.3 கிருஷ்ணமூர்த்தி தனது முதல் விசாரணையில் "நான் தற்போது கும்மிடிபூண்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கவரைப்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 16.05.2025 அன்று நிலைய பணியில் இருந்தபோது இராணி என்பவர் காவல் நிலையம் ஆஜராகி 15.05.2025 அன்று நடைபெற்ற சம்பவம் தொடர்பாக கொடுத்த எழுத்து மூலமான **அ.சா.ஆ.1** புகாரினை பெற்று கவரைப்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.102/2025 சட்ட பிரிவுகள் 296(b), 118(1), 351(3) இதச 4 of TNPHW Act ன் கீழ் **அ.சா.ஆ.2** முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோகிலா, செந்தில் குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.3** பார்வை மகஜர் மற்றும் **அ.சா.ஆ.4** மாதிரி வரைபடம் தயார் செய்தேன். தயார் செய்யப்பட்ட பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடமிருந்து சாட்சி கையொப்பம் பெற்றும் புகார்தாரரான இராணி மற்றும் சாட்சிகளான நந்தினி, காயத்ரி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான கோகிலா, செந்தில் குமார் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் அவர்களை 25.05.2025 பகல் 11.45 மணிக்கு அணைக்கட்டு அருகே கைது செய்தேன். பின் அதே தேதியில் 12.15 மணிக்கு 1 ம் எதிரி தன்னிச்சையாக

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.03.11 19:07:15 +0530

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகளான ரஜினி மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து அவர்களின் கையொப்பம் பெற்று சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதே தேதியில் 13.45 மணிக்கு 1ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த **அ.சா.பொ.1** இரண்டு அடி நீளம் உள்ள சவுக்கு உருட்டுகட்டை ஒன்று, **அ.சா.பொ.2** பெரிய செங்கல் ஒன்று ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி **அ.சா.ஆ.5** கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதை **அ.சா.ஆ.6** படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (சவுக்கு உருட்டு கட்டை அடங்கிய புகைப்படம் அத.சா.ஆ.7 ஆகவும், பெரிய செங்கல் அடங்கிய புகைப்படம் அத.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது). பின்னர் எதிரிகளை 25.05.2025 ம் தேதி நீதிமன்ற காவலில் வைக்க வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு நீதிமன்ற காவலில் அனுப்பப்பட்டனர். பின்னர் இவ்வழக்கின் புலனாய்வு முடித்து 06.10.2025 ம் தேதி சட்டபிரிவுகள் 296(b), 118(1), 351(3) இதச 4 of TNPHW Act ன் கீழ் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்." என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. எனினும் அ.சா.3 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கிராமம் பெரிய கிராமம் என்றால் சரிதான். அதில் சுமார் 1000–திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றது ஒரு பொது ரோடு என்றால் சரிதான். அந்த பொது ரோட்டைதான் கிராம மக்கள் அனைவரும் பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான் புகாரானது ஒரு நாள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை எனது விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் என்ன கட்டை மற்றும்

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.03.11 19:07:21 +0530

என்ன கல் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் பெரிய கல் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் ஆனால் அது முழு செங்கல்லா அல்லது அரை செங்கல்லா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் இல்லை அந்த தெருவில் வசிப்பவர்கள் ஆனால் உறவினர்களா என்று தெரியாது. புகார்தாரரின் வீட்டை தாண்டிதான் எதிரிகள் அவர்களது வீட்டிற்கு செல்ல முடியும் என்றால் சரிதான். புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் உள்ள நில பிரச்சினை சம்மந்தமாக கொடுக்கப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல." என தெரிவித்துள்ளார்.

17. இவ்வாறு வழக்கின் விசாரணை குறித்தும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் அ.சா.3 தகுந்த முறையில் சாட்சியம் அளித்துள்ள போதிலும், புகார்தாரரான அ.சா.1 புகாரில் உள்ள கைரேகையை மறுத்து வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்று கூறி புகார்தாரரே அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத காரணத்தாலும் காயம்பட்ட சாட்சியான அ.சா.2ம் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத காரணத்தாலும் பிற பட்டியல் சாட்சிகள் விசாரிக்கப்படாமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளனர். எனவே தற்போதுள்ள சாட்சியங்களின் மூலம் சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெற்றதா என்பதை குறித்து சந்தேகம் எழுகிறது. இவ்வாறு மேற்படி சாட்சிகளின் மூலம் அரசுதரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்படாத நிலையில் அ.சா.3 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின்

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.03.11 19:07:29 +0530

அடிப்படையில் மட்டுமே எதிரிகள் தான் மேற்படி குற்ற செயலில் ஈடுபட்டார் என்பதை உறுதி செய்ய இயலாது.

18. எனவே மேற்கண்ட பரிசீலனைகள் மூலம் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பான அரசு தரப்பு வழக்கு குறித்தும், சம்பவம் குறித்தும், குற்றச்சாட்டுகள் குறித்தும் சந்தேகமே எழுகிறது. மேலும் அரசு தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று தெரிகிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யலாமென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. முடிவாக, எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS–ன் கீழ் எதிரிகள் குற்றவாளி இல்லை என தீர்மானித்து, பாரதிய நியாயக் சுரக்ஷா சன்ஹிதா 271(1)of BNSS-ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20. எதிரிகள் இவ்வழக்கில் எழுதிக்கொடுத்த பிணைமுறியை மேல்முறையீட்டு காலக்கெடுவிற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

21. இவ்வழக்கில் P.I.No.332/2025–ல் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான சுமார் 2 அடி நீளமுள்ள சவுக்கு உருட்டு கட்டை–1, பெரிய செங்கல் ஒன்று மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழித்திட உத்தரவிடப்படுகிறது.

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2026.03.11 19:07:35 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் வருடம் மார்ச் மாதம் 11–ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2026.03.11 19:07:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்

கும்மிடிபூண்டி

**அரசு தரப்பு சாட்சிகள்**

| **வ.எண்** | **சாட்சிகளின் விபரம்** | **சாட்சி வகைப்பாடு** |
|---|---|---|
| அ.சா.1 | ராணி | (Complainant) |
| அ.சா.2 | நந்தினி | (Victim Statement) |
| அ.சா.3 | கிருஷ்ணமூர்த்தி | ( Investigating Officer) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்** | **சான்றாவண விபரம்** | குறியீடு செய்த சாட்சி |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.3 |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ. 4 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | படிவம் 91 | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | சவுக்கு உருட்டு கட்டை அடங்கிய புகைப்படம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.8 | பெரிய செங்கல் அடங்கிய புகைப்படம் | அ.சா.3 |

**அரசுதரப்பு சான்றுபொருள்கள்**

| **வ.எண்** | **சான்றுபொருள் விவரம்** | குறியீடு செய்த சாட்சி |
|---|---|---|
| அ.சா.பொ.1 | சுமார் 2 அடி நீளமுள்ள சவுக்கு உருட்டு கட்டை–1 | அ.சா.3 |
| அ.சா.பொ.2 | பெரிய செங்கல் ஒன்று | அ.சா.3 |

எதிரிதரப்பு சாட்சி : இல்லை

எதிரிதரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**குறிப்பு**

1. வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2.எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரி நீதிமன்ற பிணையில் இருந்தார்.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2026.03.11 19:07:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்
கும்மிடிபூண்டி